மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், காங்கயம்

<u>அசல் வழக்கு எண்.65/2019</u>

2025ம் ஆண்டு நவம்பர் 06ம் நாள் வியாழக்கிழமை வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு சட்டத்தின் ஏற்பாட்டின்படி திருமதி.கே.எஸ்.மாலதி, பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | மணிவேல் | தொழில் | |
| த/பெ | | ஊர் | |
| வயது | | தாலூக்கா | காங்கேயம் |
| மதம் | இந்து | மாவட்டம் | திருப்பூர் |

<u>06.11.2025 வா.சா.1 ஆஜர் சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டு 1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

1. தற்போது என் குழந்தைகள் இருவரும் யாருடைய பராமரிப்பில் உள்ளார்கள் என்றால் என் மனைவி பராமரிப்பில் உள்ளார்கள். திருமணத்திற்கு முன்பு நான் என்ன வேலை செய்து வந்தேன் என்றால் ஹோட்டல் வைத்திருந்தேன். எங்கு ஹோட்டல் வைத்திருந்தேன் என்றால் TRG மில் எதிரில் வெள்ளகோவிலில் ஹோட்டல் வைத்திருந்தேன். திருமணத்திற்கு பின்பு நான் மசாலா கம்பெனி ஆரம்பித்தேன்.

2. தற்போது சிறிதாக ஒரு பிசினஸ் செய்து வருகிறேன். எந்த வருடத்தில் இருந்து எந்த வருடம் வரை நான் லாட்டரி விற்பனை செய்து வந்தேன் என்றால் அது பகுதி நேர தொழிலாக ஒரு சில

வருடங்கள் மட்டும் செய்தேன். லாட்டரி தொழிலை வீரக்குமார் தியேட்டர் முன்பும் செய்து வந்தேன் என்றால் அங்கேயும் எனது ஹோட்டலிலும் வைத்து செய்து வந்தேன். அந்த லாட்டரி தொழிலுக்கு என்ன பெயர் வைத்திருந்தேன் என்றால் பெயர் எதுவும் வைக்கவில்லை சும்மா சிறிய அளவில் செய்து வந்தேன். திருமணத்திற்கு பின்பு என் மனைவியால் சுக்கு காபி வியாபாரம் ஆரம்பிக்கப்பட்டு அதை நான் செய்து வந்தேன் என்றால் இல்லை அந்த தொழிலை நான் தான் ஆரம்பித்தேன் என் மனைவிக்கு அந்த தொழிலை ஆரம்பிக்கும் அளவிற்கு எந்த வசதியும் இல்லை.

3. என் மனைவி திருமணத்திற்கு முன்பு ஒரு கல்லூரியில் வேலை பார்த்து வந்தார் என்றால் இல்லை கல்லூரியில் படித்து வந்தார். எனது மனைவி எந்த கல்லூரியிலும் வேலை பார்க்கவில்லை என்று நான் சொல்கிறேனா என்றால் ஆமாம். என் மனைவி தாராபுரம், மகாராஜா கலை அறிவியல் கல்லூரியில் விரிவுரையாளராக வேலை பார்த்து வந்தார் என்றால், திருமணத்திற்கு முன்பு அவர் அந்த வேலை பார்க்கவில்லை திருமணத்திற்கு பின்பு என்னுடன் இரண்டு ஆண்டுகள் தான் இருந்தார். அதற்கு பின்பு என்ன வேலை பார்த்தார் என்று எனக்கு தெரியாது.

4. திருமணத்திற்கு பின்னிட்டு எனது மனைவியின் கடின உழைப்பால் தான் சுக்கு காபி வியாபாரம் ஆரம்பிக்கப்பட்டு அதை வீடு வீடாக கொண்டு சென்று என் மனைவி செய்து வந்தார் என்றால் இல்லை. என் மனைவி செய்து வந்த சுக்கு காபி வியாபாரத்தை பெரிய அளவில்

செய்ய வேண்டும் என்ற காரணத்தினால் என் மனைவி தான் எனது பெயரில் நிறுவனம் ஆரம்பித்து அந்த தொழிலை விரிவு படுத்தி பெரிதாக செய்தார் என்றால் அவ்வாறு எதுவும் இல்லை. சுக்கு காபிக்கு உண்டான மூலப் பொருட்கள் அனைத்தையும் என் மனைவி தான் தயார் செய்து கொடுத்தார் என்றால் சரியல்ல.

5. என் மனைவி ஆரம்பித்த நிறுவனம் பெரிய முறையில் வளர்ந்ததால் நான் குடிக்கு அடிமையாகி என் அம்மா பேச்சை கேட்டுக் கொண்டு நான் என் மனைவியை கொடுமை படுத்தினேன் என்று சொன்னால் சரியல்ல. என் உறவினர்கள் மற்றும் ஊர் பெரியவர்கள் சேர்ந்து பைசல் செய்ததன் அடிப்படையில் வெள்ளகோவிலில் உள்ள 0.5 சென்ட் நிலத்தை 1ம் பிரதிவாதிக்கும், 0.5 சென்ட் நிலத்தை இரண்டாம் பிரதிவாதிக்கும் நான் எழுதிக் கொடுத்தேன் என்றால் பைசல் எதுவும் பேசவில்லை விவாகரத்து கொடுக்க வேண்டும் என்றால் சொத்து வேண்டும் என கேட்டதால் அந்த சொத்துக்களை எழுதிக் கொடுத்தேன்.

6. நான் என் தாயாரின் பேச்சைக் கேட்டுக் கொண்டு தான் தாராபுரம். சார்பு நீதிமன்றத்தில் விவாகரத்து கேட்டு HMOP.NO.44/2005 என்ற வழக்கை நான் தாக்கல் செய்தேன் என்று சொன்னால் சரியல்ல. என் அம்மாவிற்கும் நான் தாக்கல் செய்தால் மேற்படி வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை. 2008 ஆம் ஆண்டு என் மனைவி விவாகரத்து கொடுக்க தனக்கு ஆட்சேபனை இல்லை என மனு போட்டதால் தான் எனக்கு விவாகரத்து கிடைத்தது என்றால் ஆமாம். விவாகரத்திற்கு

பின்னால் என்னால் தொழிலை சரிவர நடத்த முடியாததாலும் தொழிலுக்கான மூலப்பொருட்களை தயார் செய்ய முடியாததாலும் அந்த தொழில் மிகப் பெரிய நஷ்டம் ஏற்பட்டு விட்டது என்று சொன்னால் சரியல்ல.

7. அதனால் ஊர் பெரியவர்கள் பைசல் செய்து வைத்ததன் அடிப்படையில் கடந்த 14.07.2008 ஆம் தேதி எங்களுக்கு மீண்டும் திருமணம் செய்து வைத்தார்கள் என்றால் இல்லை நாங்களாக பதிவு திருமணம் செய்து கொண்டோம். திருமணத்திற்கு பின்னிட்டு என் மனைவி தான் பழையபடி நிறுவனத்தை கவனித்து வந்தார் என்றால் இல்லை. அதனால் நிறுவனம் நல்ல முறையில் வளர்ச்சி அடைந்ததால் ஆம்ஸ்ட்ராங் என்ற நிறுவனத்தை என் மனைவி தான் நிர்வாகம் செய்து வந்தார் என்றால் சரியல்ல.

8. அதனால் ஊர் பெரியவர்கள் சேர்ந்து பைசல் செய்து வைத்ததன் அடிப்படையில் நிறுவன பங்குகளில் எனக்கு 50 சதவீதமும், எனது மனைவிக்கு 5 சதவீதமும் எனது மூத்த மகனுக்கு 45 சதவீதமும் பங்குகள் ஒதுக்கப்பட்டு பேசி முடிக்கப்பட்டது என்றால் என் மனைவி என் மீது காங்கேயம், சார்பு நீதிமன்றத்தில் விவாகரத்து வழக்கு தாக்கல் செய்து மேற்படி வீதம் நான் பங்குகள் கொடுக்கவில்லை என்றால் விவாகரத்து செய்து விடுவேன் என்று என்னை நிர்பந்தப்படுத்தியதால் நான் மேற்படி வீதம் பங்குகள் கொடுத்தேன். பங்குகள் கொடுத்ததற்கு பின்பு அந்த மாதத்திலேயே என் மனைவி தாக்கல் செய்த நிர்வாகத்து வழக்கை வாபஸ் வாங்கி விட்டார். 28.06.2018 ல் தான் மேற்படி

பங்குகள் வீதத்தில் எனக்கும், என் மனைவிக்கும், எனது மூத்த மகனுக்கும் இடையே ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது என்றால் ஆமாம்.

9. 14.05.2018 தேதியில் என் மனைவி எனக்கு விவாகரத்து அறிவிப்பு அனுப்பினார் என்றால் சரிதான். நான் என் மனைவியை தொடர்ந்து அடித்து கொடுமைப்படுத்திய காரணத்தினால் தான் என் மனைவி எனக்கு விவாகரத்து நோட்டீஸ் அனுப்பினார் என்று சொன்னால் சரியல்ல. என் மனைவி விவாகரத்து நோட்டீஸ் அனுப்பியதால் தான் ஊர் பெரியவர்கள் ஒன்று கூடி பைசல் செய்து பங்குகளை பிரித்துக் கொடுத்து அதன்படி நிறுவனத்தை கவனித்துக் கொள்ளுங்கள் என்று சொன்னார்கள் என்றால் சரியல்ல. 2012 ஆம் ஆண்டு வரை எங்கள் நிறுவனத் தொழிலை என் மனைவி தான் நல்ல முறையில் நடத்தி நான் வாங்கி இருந்த கடன்களை எல்லாம் என் மனைவி தான் அடைத்தார் என்று சொன்னால் சரியல்ல.

10. எங்கள் நிறுவன தயாரிப்புகளுக்கு பிராண்ட் பெயர்களாக வேதா, மிதுனா மற்றும் ஆம்ஸ்ட்ராங் என்ற பெயர்களை என் மனைவி தான் தேர்ந்தெடுத்து பதிவு செய்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல. மேற்படி பிராண்ட் பெயர்களை என் மனைவி பெயருக்கு மாற்றுவதற்காக கடந்த 22.12.2018 ஆம் தேதி என் மனைவிக்கு நான் ஒப்புதல் கொடுத்து கையொப்பம் போட்டுக் கொடுத்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. அவர்களாக போர்ஜரி கையெழுத்துக்களை போட்டு பெயர் மாற்றம் செய்து கொண்டார்கள்.

11. எங்கள் நிறுவன தயாரிப்பு பிராண்ட் பெயர்களை என் மனைவி பெயருக்கு மாற்ற நான் ஒப்புக்கொண்டு தான் கையொப்பம் போட்டு கொடுத்துள்ளேன் என்றும், நான் குடிக்கு அடிமையாக இருந்த காரணத்தினால் ஊர் பெரியவர்களால் பைசல் பேசப்பட்டு நான் மேற்படி பிராண்டு பெயர்களை என் மனைவி பெயருக்கு மாற்றிக் கொள்ள நான் தான் அனுமதி கடிதம் வழங்கினேன் என்று சொன்னால் சரியல்ல. நான் எங்கள் நிறுவனத்தில் இருந்து வெளியே வந்த போது அங்கிருந்து எடுத்துக் கொண்டு வந்த பணத்தை வைத்து தான் மல்லிகை ரியல் எஸ்டேட், மல்லிகை பைனான்ஸ் ஆகிய நிறுவனங்களை ஆரம்பித்து நடத்தி வந்தேன் என்று சொன்னால் சரியல்ல.

12. 2018 ஆண்டுக்குப் பிறகு எங்கள் நிறுவனத்தில் இருந்து எனக்கு விகிதாச்சாரப்படி பாத்தியப்பட்ட பொருட்களை நான் எடுத்துக் கொண்டு வந்தேன் என்றும், என் மனைவிக்கு விகிதாச்சாரப்படி பாத்தியப்பட்ட பொருட்களை அவர் எடுத்துக் கொண்டு சென்றார் என்றும் சொன்னால் சரியல்ல. கட்டிடத்தை மட்டும் விட்டுவிட்டு அனைத்து இயந்திரங்களையும் என் மனைவியை எடுத்து சென்று விட்டார். என் மனைவி மற்றும் என் மூத்த மகன் ஆகியோர்களுக்கு விகிதாச்சாரப்படி பாத்தியப்பட்ட பொருட்களை எடுத்துக் கொண்டு சென்று தான் அவர்கள் தனியாக நிறுவனம் ஆரம்பித்து நடத்தி வருகிறார் என்று சொன்னால் சரியல்ல.

13. எனது விகிதாச்சார பொருட்களை நான் எடுத்துக் கொண்டு வந்து தான் எனது பெயரில் நிறுவனம் ஆரம்பித்து நடத்தி வருகிறேன் என்று

சொன்னால் சரியல்ல. என் மனைவியும் எனது மகனும் நிருவன பொருட்களை எடுத்துச் சென்று விட்டதாக நான் அவர்கள் மீது காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். அந்த புகார் பொய்யானது என்று சொன்னால் சரியல்ல. நான் கொடுத்த புகாரை காவல் துறையினர் விசாரித்து அது பொய் புகார் என தள்ளுபடி செய்து விட்டார்கள் என்றால் அது எனக்கு தெரியாது. அது சம்பந்தப்பட்ட அறிவிப்புகள் எனக்கு வந்துவிட்டது என்றும், தற்போது வழக்கிற்காக அது பற்றி எனக்கு தெரியாது என நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

14. வேண்டாதவர்கள் பேச்சைக் கேட்டுக் கொண்டு பிரதிவாதிகள் நடத்தி வரும் நிறுவனத்தை முடக்க வேண்டும் என்ற எண்ணத்தினால் தான் நான் இந்த வழக்கை பொய்யாக தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. ஆம்ஸ்ட்ராங் நிறுவனத்தில் இருந்து இந்த வழக்கு பிரதிவாதிகள் எந்த ஒரு பொருள்களையும் எடுத்து வரவில்லை என்று சொன்னால், ஆறு இயந்திரங்களை எடுத்துச் சென்றதாக விவாகரத்து வழக்கில் ஒப்புக்கொண்டு உள்ளார்கள்.

15. என் மனைவி தனியாக குருசாலா என்ற நிறுவனத்தை ஏற்படுத்தி நடத்தி வருகிறார் என்றால் எனது பழைய நிறுவனத்தை பெயரை மாற்றி அவ்வாறு நடத்தி வருகிறார்கள் எனது பழைய நிறுவனம் எங்கு நடந்து வந்தது என்றால் VPMS நகரில் நடந்து வந்தது. என் மனைவி ஆரம்பித்துள்ள குருசாலா என்ற நிறுவனம் எங்கு நடந்து வருகிறது என்றால், கொங்கு நகரில் முத்தூர் சாலையில் நடந்து வருகிறது. பிரதிவாதிகள் நிறுவனம் நடத்தி வருவது எனக்கு பிடிக்காத

காரணத்தினால் தான் நான் இந்த வழக்கை பொய்யாக தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.

16. நான் ஆம்ஸ்ட்ராங் நிறுவனத்தில் இருந்து கொண்டு வந்த பொருட்களை வைத்து தொழில் ஆரம்பித்து அந்த தொழில்கள் நஷ்டம் அடைந்து விட்டது என்றும் தற்போது தொழில் எதுவும் இல்லாமல் நான் இருக்கும் காரணத்தினால் பிரதிவாதிகள் மீது இந்த வழக்கை தாக்கல் செய்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. எங்களுக்குள் ஏற்படுத்தப்பட்டுள்ள ஒப்பந்தத்தின் அடிப்படையில் நான் இந்த நீதிமன்றத்தில் எந்த வழக்கையும் தாக்கல் செய்ய இயலாது என்று சொன்னால் சரியல்ல. எங்களுக்குள் நாங்கள் ஏற்படுத்திக் கொண்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில் பிரச்சனை ஏதேனும் ஏற்பட்டால் அது சம்பந்தமாக இசைவு தீர்ப்பாயத்திற்கு தான் செல்ல முடியும் என்றும், இந்நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்ய எனக்கு எவ்வித உரிமையும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

17. எங்களுக்குள் பிரச்சனை ஏதேனும் ஏற்பட்டால் அது சம்பந்தமாக இசைவு தீர்ப்பாயத்திற்கு தான் செல்ல வேண்டும் என்பதை ஒப்புக்கொண்டு தான் நான் ஒப்பந்தம் ஏற்படுத்தியுள்ளேன் என்றால் சரிதான். இதுவரை இசைவு தீர்ப்பாயத்தை அமைக்க என்னால் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்றால் சரிதான். இசைவு தீர்ப்பாயம் மூலம் எந்த நடவடிக்கையும் என்னால் எடுக்கப்படாத நிலையில் நான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளது ஏற்றுக்கொள்ளத்தக்கது அல்ல என்று சொன்னால் சரியல்ல.

பிரதிவாதிகளின் தொழிலை முடக்க வேண்டும் என்றும், அவர்களை வறுமைக்கு தள்ள வேண்டும் என்ற காரணத்தினால் மட்டும் தான் நான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.

18. எனது இரண்டு குழந்தைகளையும் என் மனைவி பராமரித்து கொண்டு என் மனைவி மிகவும் கஷ்டமான நிலைமையில் இருந்து வருகிறார் என்றும் அவரை மேலும் கஷ்டத்திற்கு உள்ளாக்கத்தான் நான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றும் சொன்னால் சரியல்ல. இந்த வழக்கில் நான் கேட்டுள்ள பரிகாரங்கள் எதுவும் எனக்கு கிடைக்கத்தக்கது அல்ல என்று சொன்னால் சரியல்ல. எனவே நான் தாக்கல் செய்துள்ள இந்த வழக்கு பிரதிவாதிகளின் செலவு தொகையோடு தள்ளுபடியாகத்தக்கது என்று சொன்னால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் சரிபார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கைரேகை செய்தும்/கையொப்பம் செய்தும் ஒப்புக்கொள்ளப்படுகிறது.

K S MALATHI

Digitally signed by K S MALATHI
Date: 2025.11.06 19:08:41 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம்